## பாலியல் அல்லது பால்நிலை துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை கொள்கையின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உப சட்டங்கள்

## பேராதனை பல்கலைக்கழகம்

இந்த உப சட்டங்கள் பல்கலைக்கழக (திருத்தப்பட்ட) 1985இன் 7ம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட பல்கலைக்கழக 1978இன் 16ஆம் இலக்க சட்டத்தின் கீழ் 29, 35 (6) 45, 46 மற்றும் 135 (3) பிரிவுகளுடன் சேர்க்கப்பட்ட 135 (1) (h) ஆம் சரத்தின் கீழ் பல்கலைக்கழக ஆலோசனை சபையினால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 1. தலையங்கமும் அதனது பிரயோகத்துக்கான வரையறையும்

இந்த உப சட்டங்கள் “பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறைக் கெதிரான முறைப்பாடுகளினை விசாரிப்பதற்கான 'நடைமுறை விதிகள்'” எனவும் எடுத்துக் கூறப்படலாம்.

இந்த உப சட்டங்கள் அவற்றினது முக்கியமான விடயங்களிலே மாற்றங்கள் மேற்கொள்ளப்படாத வகையில் ஆனால் தேவையான திருத்தங்களுடன் (*mutatis mutandis*) பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான எல்லா நிலுவையில் இருக்கும் முதற்கட்ட விசாரணைகள் மற்றும் முறைப்படியான விசாரணைகள் ஆகியவற்றின் மீது பிரயோகிக்கப்படும்.

### 2. பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை முதலியவற்றை புலன் விசாரணை செய்யும் குழு (CMSGBHSV)

#### 2.1. குழுச்சேர்க்கை

2.1.1 இந்த உப சட்டங்களின் நோக்கத்திற்காக 'பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை முதலியவற்றை விசாரிப்பதற்கான செயற்குழு' **(CMSGBHSV)** எனப்படும் ஒரு பிரிவு ஸ்தாபிக்கப்படும். (இந்தக் குழு இந்த ஆவணத்தில் இனி வரும் செய்வதற்கான பகுதிகளிலே **(CMSGBHSV)** அல்லது கமிட்டி என அழைக்கப்படும்)

2.1.2 இந்த செயற்குழு பல்கலைக்கழக சபையினால் நியமிக்கப்படும் 15 அங்கத்தவர்களை கொண்டிருக்கும். இப்படியான நியமனங்களை ஏற்படுத்தும் பொழுது பல்கலைக்கழக சபையானது பின்வரும் பிரதி நிதித்துவத்தை ஊர்ஜிதப்படுத்தும்:

அ) சபையின் அங்கத்தவர்களிலிருந்து இரண்டு (2) நபர்கள்,

ஆ) கல்விசார் துறையில் நிரந்தர மற்றும் மூத்த அங்கத்தவர்களிலிருந்து தேர்தெடுக்கப்பட்ட பத்து (10) நபர்கள்,

இ) பல்கலைக்கழகத்தின் வெளியேயுள்ள ஓய்வு பெற்ற கல்விசார் அல்லது நிர்வாக உத்தியோகத்தவர்களிலிருந்து மூன்று (3) நபர்கள்.

2.1.3 இந்த நியமனங்களின் பொழுது பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் வன்முறை வழக்குகளை புலன் விசாரித்து, விசாரணை செய்வதற்காக பயிற்றப்பட்ட, பாலியல் சமத்துவம் மற்றும்

சமபங்கு சம்பந்தமான பிரச்சனைகளை கையாள்வதில் ஆர்வமுள்ளதை நிரூபித்துள்ள, பாலின உணர் திறனை எடுத்துக் காட்டியவர்களிடையே தெரிவு செய்யப்பட்டுள்ளனர், என்பதை இயன்ற அளவு பல்கலைக்கழக சபை அங்கத்தவர்கள் ஊர்ஜிதப்படுத்துவர்.

2.1.4 இந்த உப சட்டங்களின் 2.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு காரணத்தால் அவ்வங்கத்தவரொருவரின் பதவி வெற்றிடமாக்கப்பட்டால் ஒழிய, உப – பந்தி 2 இன் கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு குழு அங்கத்தவரும் மூன்று (3) வருடங்களுக்கு பதவியில் இருப்பார்.

2.1.5 உபபந்தி 2 இன் கீழ் நியமிக்கப்பட்ட ஒருவர் மீண்டும் ஒரு மூன்று (3) வருட தவணை மாத்திரமே மீள் நியமிக்கப்பட தகுதி உடையவராவார்.

2.1.6 குழுவானது தனது முதல் கூட்டத்தில் தனது அங்கத்தவர்களிடையேயிருந்து ஒரு தலைவரை நியமிக்கும். ஒருமைப்பாடு அல்லது ஆர்வம் இல்லாதவிடத்து, குழுவின் மிக மூத்த அங்கத்தவரை தலைவராக செயல்படும் படி துணை வேந்தர் கோரிக்கை விடுப்பார்.

2.1.7 சட்ட உத்தியோகத்தர் அல்லது சட்ட ஆவணமாக்கற் பிரிவின் உதவிப் பதிவாளர் (AR)/ சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (SAR)/ துணை பதிவாளர் (DR) குழுவின் செயலாளராக செயல்படுவார்.

**2.2. வேறு வழிகளினால் தகுதியிழப்பு அல்லது பதவி காலியாதல்:**

2.2.1 ஓர் உறுப்பினரின் பதவி காலியாவது-

அ. அந்த உறுப்பினரின் மரணம் சம்பவித்தல்;

ஆ. துணை வேந்தருக்கு விலாசமிடப்பட்டு எழுத்து மூலம் அந்த உறுப்பினர் ராஜினாமா செய்தல்;

இ. கீழ்வரும் 2.2.2 இல் குறிப்பிடப்பட்ட அடிப்படையில் இந்த உறுப்பினர் பதவியிலிருந்து தகுதி அற்றுப்போதல்; அல்லது

ஈ. அந்த உறுப்பினர் குழுவின் தலைவருக்கு எந்த விளக்கத்தினையும் கொடுக்காது குழுவின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களிலே கலந்துகொள்ளத் தவறுகின்றமை

உ. அந்த உறுப்பினரின் பதவிக்காலம் காலாவதியாதல்.

2.2.2 குழுவின் ஓர் உறுப்பினர் குழுவில் பணிபுரிவதிலிருந்து தகுதியிழக்கப்படுவது:

அ. இந்தக் கொள்கையினால் தடை செய்யப்பட்டிருக்கும் நடத்தையில் அவர் ஈடுபட்டார் என்பதாக அவருக்கு எதிராக ஒரு முறைப்பாடு இருத்தல்; அல்லது

ஆ. இந்தக் கொள்கையினால் தடை செய்யப்பட்டிருக்கும் நடத்தையில் ஈடுபட்டதாக அவர் குற்றவாளியாக காணப்படல்; அல்லது

இ. அவரின் **(CMSGBHSV)** இன் உறுப்பினர் கடமையுடன் மோதல் தரக்கூடிய அறிவிக்கப்படாத கருத்து வேற்றுமை உடையவர் என காணப்படல்; அல்லது

ஈ. மனம் அல்லது உடல் பலவீனக் காரணத்தால் தொடர்ந்தும் கடமையாற்ற தகுதியற்றவரானால்; அல்லது

உ. தகுதிவாய்ந்த, அதிகார பூர்வ நீதிமன்றம் ஒன்றினால் தெளிவற்ற மனநிலை உள்ளவர் என அறிவிக்கப்பட்டால்; அல்லது

ஊ. குழுவின் செயல்பாடுகளின் இரகசிய தன்மையை மீறியிருந்தால்.

2.2.3. குழுவின் தலைவர் அல்லது யாராவது அங்கத்தவர் தனது ராஜினாமாவை எழுத்து மூலம் துணை வேந்தருக்கு கையளிப்பதன் மூலம் எந்நேரத்திலும் தனது பதவியை ராஜினாமா செய்யலாம். இந்த ராஜினாமாவானது, துணை வேந்தரால் ஏற்றுக் கொள்ளப்படும் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

2.2.4. பதவி காலியாகும் தருணத்தில், பல்கலைக்கழக சபையானது உப – பந்தி 2.1.2 இல் குறிப்பிடப்பட்ட செயல் முறைப்படி, இன்னொருவரை, யாருக்காக அவர் தொடர்கின்றாரோ அவ்வங்கத்தவரின் காலாவதியாகிய பதவிக்காலத்தை வகிப்பதற்காக நியமிக்கும்.

**2.3. செயற்குழுவின் கூட்டங்கள்**

2.3.1 செயற்குழுவானது, ஒரு வருடத்தில் 05 தடவைகள் அல்லது தேவைக்கேற்ப கூடும். எனினும் கூட்டங்களுக்கு இடையேயுள்ள இடைவெளி 60 நாட்களுக்கு மேல் இருக்கமாட்டாது.

2.3.2 எல்லா கூட்டங்களுக்கும் தலைவரே தலைமை வகிப்பார். ஏதாவது ஒரு கூட்டத்தில் தலைவர் இல்லாதவிடத்து, அங்குள்ள அங்கத்தவர்கள், அவர்களிடையே ஓர் அங்கத்தவரை தலைமை வகிப்பதற்காக தெரிவு செய்வர்.

2.3.3 எல்லாக் கூட்டங்களினதும் நிகழ்ச்சிக்குறிப்புகள் பதிவு செய்யப்பட்டு, உறுதி செய்யபட்டு, ஏற்கப்படும்.

2.3.4. யாதொரு கூட்டத்தின் குவாரமானது (quorum) குழுவின் 1/3 பங்காக இருக்கும்.

**2.4. குழுவின் அதிகாரங்கள், கடமைகள், செயல்பாடுகளாவன:**

2.4.1 இந்தக் கொள்கையினால் தடை செய்யப்பட்டிருக்கும் நடத்தை தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு துணை வேந்தருக்கும் மற்றும் சபைக்கும் உதவி அளித்தல்.

2.4.2. பல்கலைக்கழகத்தின் இது தொடர்பான கொள்கை மற்றும் உபவிதிகளின் கீழ், முறைப்பாடுகளின் குறை நிவர்த்திக்கான பணியில் பங்களித்தல்.

2.4.3. இந்தக் கொள்கையின் கீழ் தடை செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பில் வளாகங்களில் எழும் நிலைமைகளின் மத்தியஸ்தத்தில் உதவுதல்.

2.4.4 பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பின் கீழ்வரும் எல்லா நபர்களின் மீதும் எல்லா இடங்களிலும் இந்தக் கொள்கையை செயல்படுத்துவதில் துணை வேந்தருக்கும், கவுன்சிலுக்கும் பரிந்துரை செய்தல்.

2.4.5 எல்லா விடுதிகள், பீடங்கள், நிர்வாக கட்டடங்கள், நிறுவனங்கள், சௌக்கிய மையங்கள், நூலகங்கள், உடற்பயிற்சிக்கூடங்கள், உணவகங்கள் முதலியவற்றிலும் பல்கலைக்கழகமானது, கொள்கைக்கும், தடுப்புப் பொறிமுறை மற்றும் முறைபாடுகளை மேற்கொள்ளுவதற்கான பொறிமுறைக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றதென்பதை உறுதிப்படுத்தல்.

2.4.6. பாலின அடிப்படையிலான பாகுபாடு, பாலியல் அல்லது பால் நிலை ரீதியிலான துன்புறுத்தல் மற்றும் வன்முறை முதலியவற்றில், ஆராய்ச்சி மற்றும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு ஒரு பாலியல் சமபங்கு சமத்துவ (GEE) அலகை அமைப்பதற்கு பல்கலைக்கழகத்திற்கு உதவுதல்.

2.4.7. பாலியல் சமபங்கு சமத்துவ (GEE) அலகின் செயல்பாட்டை கண்காணித்தல், பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் வன்முறையால் பாதிக்கப்பட்டோருக்கு தேவைப்படும் பொழுதும், தேவைப்பட்டாலும் இந்த அலகு உதவுவதற்கு ஆதரவளித்தல். (சட்ட ஆலோசனை, உளவள ஆலோசனை மற்றும் மருத்துவ உதவி உட்பட)

2.4.8 பல்கலைக்கழக வளாகத்தில் பாலின அடிப்படையிலான பாகுபாடு, பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலின வன்முறை பிரச்சினைகள் தொடர்பாகச் செயற்படுவதற்கு ஒவ்வொரு ½ வருட தொடக்கத்திலும் அறிவித்தல் மூலம் தொண்டர்களைக் கொண்ட போதுமானதொரு பிரதிநிதித்துவ அணியை தூண்டுவதற்கு பாலியல் சமபங்கு சமத்துவ (GEE) அலகுடன் செயல்படல்.

2.4.9. எல்லா உறுப்பினர்களினதும் தொண்டர்களினதும் தொடர்பு கொள்ளும் விபரங்களை (காரியாலய மற்றும் பிரத்தியேக) பரவலாக விளம்பரப்படுத்தல்.

## 3. விசாரணைச் செயன்முறை

### 3.1. முறைப்பாடுகள்

3.1.1 எவராவது இந்த உப விதிகளின் அட்டவணை 1 இனால் விவரிக்கப்பட்ட ஏதாவது நடத்தையில் ஈடுபடுவதன் மூலம் பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறையின் கொள்கையால் தடை செய்யப்பட்ட நடத்தை தொடர்பாக ஒரு முறைப்பாட்டை செய்ய விரும்பினால், அம்முறைப்பாட்டை,

(அ) துணை வேந்தருக்கும்; மற்றும்/அல்லது

(ஆ) **(CMSGBHSV)** தலைவருக்கும்; அல்லது

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இணையவழி (online) முறைப்பாட்டு தொகுதியூடாகவும் செய்யலாம்.

துணை வேந்தர் முறைப்பாடொன்றைப் பெற்றுக் கொண்டதும், அவர் சாத்தியமான துரித கதியில் அதனை **(CMSGBHSV)** இன் தலைவருக்கு அனுப்பிவைப்பார்.

3.1.2 இக்கொள்கையாலும் இந்த உப விதிகளாலும் ஆட்சிப்படுத்தப்பட்ட ஒவ்வொருவரும், அக்கொள்கையினதும் உப சட்டங்களினதும் அடிப்படையால் தடை செய்யப்பட்ட ஏதாவது நடவடிக்கையானது இந்தக் கொள்கையாலும் உப சட்டங்களினாலும் ஆட்சிப்படுத்தப்பட்ட ஒருவரால் செய்யப்பட்டுள்ளதென அவர் அறிவுக்கு எட்டினால் அதை (CMSGBHSV)க்கு அறிவிப்பதற்கு தகுதி உடையவராவார்.

3.1.3 முறைபாடுகள் வாய்மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ இருக்கலாமென்பதோடு ஆரம்ப முறைப்பாடுகள் அநாமதேயமாகவும் இருக்கலாம். வாய்மூலமாக முறைப்பாடுகள் செய்யப்படும் பொழுது, அவை எழுத்தில் பதிவு செய்யப்பட்டு முறைப்பாட்டாளரின் கையெழுத்திடப்பட வேண்டியது அம்முறைப்பாட்டை பெற்றுக்கொள்ளும் அதிகாரியின் பொறுப்பாகும்.

3.1.4 ஆரம்ப முறைப்பாடானது அநாமதேயமாக இருக்கும் படசத்தில் (CMSGBHSV) ஆனது முறைப்பாடு கிடைக்கப்பெற்ற உடனேயே பெயர் குறிப்பிட்ட நபர்/நபர்களுக்கு பாராபட்சமின்றி முறைப்பாட்டின் உள்ளடக்கங்களை சரிபார்ப்பதோடு, விசாரணையை மேலும் தொடர சாத்தியமான காரணம் உண்டாயின் அதை துணை வேந்தருக்கு அறிவிக்கும்.

3.1.5 முறைப்பாட்டைப் பெறும் அதிகாரி, நிலைமை அவசரமானதாக இருக்கும் பட்சத்தில், முறைப்பாட்டாளரை வைத்திய சட்ட ஆலோசனைக்கு அல்லது வேறு உதவிகளுக்கு அனுப்பி வைப்பார். இப்படியான செயல் முறையானது எந்நிலையிலாவது நடைமுறையிலுள்ள எந்த சட்டத்தின் கீழாவது, முறைப்பாட்டாளர் குறை நிவர்த்தியை பெறுவதிலிருந்து தற்போதைக்கு தடையாக அமையாது.

### 3.2 ஆரம்ப கட்ட விசாரணை

இந்த உப சட்டங்களினால் வேறு ஏதாவது வழங்கப்பட்டிருந்தால் ஒழிய, முறைப்பாட்டாளர்/ஆளர்களின் அடையாளம் அறியப்பட்டாலும் சரி, அறியப்படாவிட்டாலும் சரி துணை வேந்தரானவர் ஆரம்ப விசாரணை யினை மேற்கொள்வார்.

3.2.1 ஆரம்ப விசாரணையானது இரகசிய விசாரணையாகும். ஆரம்ப விசாரணையின் நடத்தையுடன் தொடர்புடைய விடயங்களுக்கு இந்த விதிகளினால் கொடுக்க முடியாவிட்டால், பல்கலைக்கழக ஸ்தாபன

கோவையின் அத்தியாயம் XXII இன் உப-பந்தி 8.1.1, அதே போன்று ஏற்புடையதாகும் (*mutatis mutandis*).

3.2.2 துணைவேந்தர் கவுன்சிலின் கலந்தாலோசனையுடன் ஆரம்ப விசாரணை குழுவொன்றை (PIC) நியமிப்பார். முதற்கட்ட விசாரணையினை மேற்கொள்ளுவதற்கான குழுவுக்கான நபர்களை நியமிப்பது தொடர்பிலே பல்கலைக்கழக ஸ்தாபன கோவையின் அத்தியாயம் XXII இன் 6ஆவது பிரிவு ஏற்புடையதாகும் (mutatis mutandis).

3.2.3 குறைந்த பட்சம் PIC இன் ஓர் உறுப்பினராவது இந்த உப சட்டங்களின் 2.1.2இல் கொடுக்கப்பட்டுள்ள (அ) மற்றும் (ஆ) பிரிவுகளைச் சேர்ந்த (CMSGBHSV) உறுப்பினர்களில் இருந்து தெரிவுசெய்யப்படுவார்.

3.2.4 PIC ஆனது போதுமானளவு பாலின சமநிலையையும் முறைப்பாட்டுக்குரியவர்களின் பால்நிலைகளின் பிரதிநிதித்துவத்தையும் உறுதிப்படுத்தும்.

3.2.5 சட்ட மற்றும் ஆவணமாக்கற் பிரிவின் மூத்த உதவிப்பதிவாளர், ஆரம்ப விசாரணைக்கு நியமித்த திகதியை முறைப்பாட்டாளருக்கு எழுத்து மூலம் அறிவிப்பார். அத்துடன் அவர் ஒரு முறையான விசாரணை அவசியம் என்பதை நிறுவுவதற்கு உரிய முதன்மையான சான்றுகளை தரும்படி, முறைப்பாட்டாளர்/ஆளர்களிடம் வேண்டிக் கொள்வார்.

3.2.6 முறைப்பாட்டை மேலும் விசாரிப்பதற்குரிய முதன்மையான ஆதாரங்கள் உள்ளதென PIC திருப்திப்பட்டால், இந்த உண்மையை பல்கலைக்கழக துணைவேந்தருக்கு எழுத்து மூலம் அறியத் தரும்.

3.2.7 முறைப்பாட்டை மேலும் விசாரிப்பதற்கு, முதன்மையான ஆதாரங்கள் உள்ளன என்று PIC அறியும் தருணத்தில், ஒரு முறைப்பாட்டாளருக்கு குறை நிவர்த்தி பெறுவதற்கு, மத்தியஸ்தம் ஊடாகவோ மற்றும்/அல்லது முறையான விசாரணையூடாகவோ என்ற விருப்பமானதொன்றைப் பெற வாய்ப்பு வழங்கப்படும். எது எவ்வாறாயினும் 3. 4. 1 இல் வழங்கப்பட்ட சூழ்நிலைகளினால் முறைப்பாட்டாளரின் விருப்பம் எப்படியாயினும் முறையான ஒரு விசாரணை ஆரம்பிக்கப்படும்.

### 3.3. மத்தியஸ்தம்

3.3.1 விடயத்தை முடிவுக்கு கொண்டுவர, மற்றும்/அல்லது மறுநிகழ்வை தடுக்க முறைப்பாட்டாளர் மத்தியஸ்தம் ஒன்றை நாட முடியும்.

3.3.2 முறைப்பாட்டாளர் மத்தியஸ்தத்தை பயன்படுத்த விரும்பினால் துணைவேந்தரிடம் மத்தியஸ்தத்திற்கான கோரிக்கையை எழுத்து மூலம் விடுக்கலாம்.

3.3.3 இப்படியான கோரிக்கையை பெற்றதும் துணைவேந்தரானவர், இயலக்கூடிய அளவு விரைவில், எதிராளிக்கு (respondent), முறைப்பாட்டாளர் குறை நிவர்த்தி பொறிமுறையாக மத்தியஸ்தத்தை விருப்பமானதாக தெரிந்தெடுத்துள்ளார் என்ற உண்மையையும், அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்களையும், அறிக்கை கிடைக்கப் பெற்று ஏழு (7) வேலை

நாட்களுக்குப் பிந்தாத ஒரு திகதியாக எதிராளியானவர் மத்தியஸ்தர்களின் தெரிவு விருப்பத்தை பல்கலைக்கழகத்திற்கு அறிவிக்க வேண்டும் என்பதையும் கொண்ட ஓர் எழுத்து மூல அறிக்கையை தருவார். இந்த அறிக்கையின் வடிவம் மற்றும் விநியோகத்திற்கு பல்கலைக்கழக ஸ்தாபன கோவையின் அத்தியாயம் XXII இன் உபபந்தி 8.2.1 ஏற்புடையதாகும்.

3.3.4 மேற்கூறிய அறிக்கை கொடுக்கப்பெற்றதன் பின்னர், துணைவேந்தர் பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை முதலியவற்றை புலன் விசாரணை செய்யும் குழு ((CMSGBHSV)) உடன் ஆலோசித்து முறைப்பாட்டுக்குரிய எல்லோருடைய சம்மதத்துடன் இரண்டு மத்தியஸ்தர்களை நியமிப்பார்.

3.3.5 மத்தியஸ்த குழுவானது ஓர் உள்ளக மத்தியஸ்தரையும் ஒரு வெளிக்கள மத்தியஸ்தரையும் கொண்டிருப்பதோடு இவர்கள் முறைப்பாட்டிற்கு உரியர்வர்களின் பாலினத்தையும் பிரதிநிதிப்படுத்துவர்.

3.3.6 மத்தியஸ்த செயற்பாடுகள் மத்தியஸ்தர்களை நியமித்த பின்னர் பரஸ்பரம் சம்மதிக்கப்பட்ட ஓர் இடத்தில் இடம்பெறும்.

3.3.7 மத்தியஸ்தர்களின் முன்னால் பிரதிநிதிப்படுத்துவதற்கு

(அ) ஒவ்வொரு முறைப்பாட்டாளரினதும் ஆர்வத்தையிட்டு அவதானிப்பாளர் (சட்டபூர்வமற்ற) ஒருவரும்; மற்றும்

(ஆ) (CMSGBHSV) இன் பிரதிநிதி ஒருவரும் அனுமதிக்கப்படுவர்.

3.3.8 மத்தியஸ்த செயற்பாடானது நட்புறவுள்ள அச்சுறுத்தலில்லாத ஒரு சூழலில் நடைபெறுகிறது என்பதை (CMSGBHSV) இன் பிரதிநிதி உறுதிப்படுத்துவார்.

3.3.9 கட்சிக்காரர்கள் ஒரு தீர்வுக்கு இணங்கப்படும் பொழுது, தீர்வின் விதிமுறைகள் எழுத்து மூலம் சுருக்கப்பட்டு மத்தியஸ்தர்களினாலும் கட்சிக்காரர்களினாலும் கையொப்பமிடப்படும். அத்துடன் மத்தியஸ்தம் நிறைவு பெற்று எவ்வளவு விரைவில் முடியுமோ இதன் பிரதி ஒன்றை மத்தியஸ்தர்கள் துணைவேந்தருக்கு அனுப்பி வைப்பார்கள். அவர் இந்த தீர்வை அங்கீகரித்து இந்த விடயம் முற்றுப் பெற்றுள்ளதென பிரகடனப்படுத்துவார்.

3.3.10 கட்சிக்காரர் ஒரு தீர்வுக்கு சம்மதிக்காவிட்டால், முறைப்பாடானது மத்தியஸ்தத்தின் மூலம் தீர்க்கப்பட முடியாது என்ற ஓர் அறிக்கையை, மத்தியஸ்தர்கள் துணைவேந்தருக்கு உடனடியாக அளிப்பர்.

3.3.11 தற்போதைக்கு, மத்தியஸ்தத்தின் பாவனையானது செயற்பாட்டில் உள்ள எந்தவொரு சட்டத்தாலும் முறைப்பாட்டாளர், குறைநிவர்த்தியை பெறுவதில் இருந்து தடுக்கமாட்டாது.

**3.4. முறையான விசாரணை**

3.4.1 முறையான விசாரணையொன்று ஆரம்பிக்கப்படுவது;

(i) மத்தியஸ்த செயற்பாடு மூலம் கட்சிகள் ஒரு தீர்வுக்கு வர சம்மதிக்காவிட்டால்;

(ii) ஒரு மத்தியஸ்த செயன்முறையின் போது ஒரு தீர்வுக்கு வருவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்களினால் சம்மதிக்க முடியாமை;

(iii) ஏதாவது ஒரு தரப்பினர் முறைப்பாட்டிற்கு முறையான விசாரணையொன்றின் ஊடாக தீர்ப்பளிப்பை பெற தெரிவு செய்தால்;

(iv) இந்த சட்டங்களின் 3.4.23 உப சட்டங்களுக்கு இணைவாக துணைவேந்தர் ஒரு முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்றை தொடங்கினால்.

3.4.2 முறைப்பாடானது முறையானதொரு விசாரணைக்குச் செல்லலாம் என்ற ஆரம்பகட்ட விசாரணையின் அறிக்கை கிடைக்கப் பெற்றதும் துணைவேந்தர் ஒரு விசாரணைக் குழுவை (Committee of Inquiry - CIQ) பல்கலைக்கழக சபையின் ஆலோசனையுடன் நிறுவுவார். முறையான விசாரணையினை மேற்கொள்ளுவதற்கான குழுவுக்கான நபர்களை நியமிப்பது தொடர்பிலே பல்கலைக்கழக ஸ்தாபன கோவையின் அத்தியாயம் XXII இன் 6ஆவது பிரிவு ஏற்புடையதாகும் (mutatis mutandis).

3.4.3 பல்கலைக்கழகத்தின் தற்போதுள்ள நடத்தை செயற்பாடுகளில் குறிப்பிட்டுள்ளபடி விசாரணை குழு (CIQ) நிறுவப்படும். எனினும், இந்தக் குழுவிலே போதுமான அளவு பால்நிலை சமத்துவம் உறுதிப்படுத்தப்படுவதுடன் முறைப்பாட்டுடன் தொடர்புடைய தரப்பினருடைய பால்நிலைகளுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படும்.

3.4.4 இந்த உப சட்டங்களிலே வேறு மாதிரி கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, துணைவேந்தரானவர் முறையான விசாரணையின் முதலாவது விசாரணை திகதியைத் தீர்மானிப்பார்; அத்துடன் அந்தத் திகதியினை சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு அவர் அறிவிப்பார்.

3.4.5 முறைப்பாட்டின் தன்மை, பதிலளிப்பாளருக்கு (Respondent) எழுத்து மூலம் அறிவிக்கப்படும். கடிதம் பதிலளிப்பாளருக்கு போதிய நேர அவகாசம் வழங்கும் வகையிலே வழங்கப்பட்டது என்பதனைப் பல்கலைக்கழகம் உறுதிப்படுத்தும். அத்துடன் கோருதல் மூலம் எதிராளி சகல ஆதாரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் பல்கலைக்கழகம் உறுதிப்படுத்தும். இக்கடிதத்தின் வடிவம் மற்றும் விநியோகத்திற்கு பல்கலைகழக நிறுவனக் கோவையின் அத்தியாயம் XXII, உபபந்தி 8:2:1 (*mutatis mutandis*) ஏற்புடையதாகும்.

3.4.6 எழுத்து மூலம் விசாரணையின் அறிவித்தல் கிடைத்த பின்னர் முறைப்பாட்டின் கட்சிக்காரர்கள் சாட்சிகளின் பட்டியலொன்றை கொடுப்பர்.

3.4.7 ஓர் ஊழியர், குடும்ப அங்கத்தவர் ஒருவர், நண்பர், மாணவ சங்க பிரதிநிதி அல்லது ஒவ்வொரு கட்சிக்காரரினதும் தெரிவு போன்றோர் முறைப்பாட்டுடன் தொடர்பான கட்சிக்காரர்களுடன் சேர்ந்து செல்லலாம். அத்துடன் இவர்களின் பெயர்களும் மற்றைய அடையாளங்களுக்குரிய தகவல்களும் சட்டம் மற்றும் ஆவணமாக்கல் பிரிவின் உதவிப் பதிவாளர் (AR)/ சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (SAR)/ துணை பதிவாளர் (DR) ஊடாக எழுத்து மூலம் குழுவிற்கு அறிவிக்கப்பட வேண்டும்.

3.4.8 கட்சிக்காரர்களுள் ஒருவர் சட்டத்தரணியாக இருக்கும் பட்சத்தில், விசாரணையின் மற்றைய கட்சிக்காரருக்கு அவசியம் ஏற்படின் ஒரு சட்டத்தரணியை பிரதிநிதிப்படுத்துவதற்கு விசாரணைக்குழு (CIQ) அனுமதியளிக்கலாம்.

3.4.9 ஒவ்வொரு கட்சிக்காரரும் சாட்சிகளை வரவழைக்கவும் மற்றைய தொடர்புடைய சான்றுகளை அளிக்கவும் உரிமை உடையவராவார்.

3.4.10 ஒரு முறைப்பாட்டின் ஒவ்வொரு கட்சிக்காரரும் அவர்கள் அவசியம் தேவை என நினைத்தால் விசாரணை குழுவானது (CIQ) குறுக்கு விசாரணை செய்ய அனுமதியளிக்கலாம்.

3.4.11 குறுக்கு விசாரணையானது வழக்குடன் நேரடித் தொடர்புள்ள விடயங்களை குறிப்பதாக இருத்தல் வேண்டும்.

3.4.12 விசாரணைக்குழுவானது மற்றைய கட்சிக்காரரிடம் கேள்விகளை கேட்டு பதில்களை பதிவு செய்யும். கேள்விகள் பொருத்தமற்றதாக தெரியும் பட்சத்தில் விசாரணை குழுவிற்கு (CIQ) கேள்விகளை அனுமதிக்காமல் இருப்பதற்கு உரிமை உண்டு. எனினும் குறுக்கு விசாரணை செய்யும் கட்சிக்காரர் கேள்வியொன்றை கேட்க விடாததற்கான காரணத்திற்கு கோரிக்கை விடுத்தால், விசாரணைக்குழு காரணங்களை கொடுக்கும்.

3.4.13 ஒருவர் ஆவணமொன்றை தருவதற்கு அழைக்கப்பட்டால், அவர் அதை கையளிப்பதால் மட்டும் சாட்சிக்காரராகமாட்டார். அத்துடன் அவர் ஒரு சாட்சியாக அழைக்கப்பட்டாலொழிய அல்லது அழைக்கப்படும் வரை அவரை குறுக்கு விசாரணை செய்ய முடியாது.

3.4.14 முறைப்பாட்டின் இரு கட்சிக்காரர்களுக்கும் பாதகமில்லாதவிடத்து ஆதாரங்களின் இரகசியத் தன்மை பேணப்பட வேண்டும் என்று சாட்சிகள் கோரிக்கை விடுத்தால், விசாரணைக்குழு அதை மதிக்கும்.

3.4.15 விசாரணையானது பல நாட்களுக்கு நீடிக்கக் கூடும். அத்துடன் தேவைப்படின் முறைப்பாட்டுக் கட்சிக்காரர்கள் பல தடவைகள் வாக்கு மூலத்திற்காக அழைக்கப்படக்கூடும்.

3.4.16 முறைப்பாட்டின் கட்சிக்காரர்களுக்கு தங்களினது வாக்குமூலத்தின் ஒரு முழுமையான எழுத்துப் பதிவையும் முறைப்பாட்டின் மற்ற கட்சிக்காரரின் வாக்கு மூலத்தின் பிரதி ஒன்றையும் கேட்பதற்கு உரிமை உண்டு.

3.4.17 விதி விலக்கான சந்தர்ப்பங்களிலொழிய முறைப்பாட்டாளரின் பாலியல் வரலாறு மற்றும்/ அல்லது பாலியல் தன்மை, ஒரு முறைப்பாட்டிற்கு பொருத்தமானதாக கருதப்பட மாட்டாது. இச்சந்தர்ப்பத்தில் இவ் எண்ணம் விசாரணைக் குழுவிற்கு முன் அறிவித்தல் மூலம் கொடுக்கப்பட வேண்டும்.

3.4.18 எதிராளியின் கடந்த கால பாலியல் வரலாறு முறைப்பாட்டுடன் தொடர்புடையதாயின் அது மேற்கோள் காட்டப்படலாம்.

3.4.19 முறைப்பாட்டின் யாதொரு கட்சியினராவது ஓர் ஒத்தி வைப்பை கோரும் பட்சத்தில் அக்கோரிக்கையை விசாரணைக்குழு நியாயமானதாக கருதினால், அது வழங்கப்படும்.

3.4.20 விசாரணைக்குழுவினால் குறிக்கப்பட்ட நாட்களில் தொடர்ச்சியாக மூன்று (3) விசாரிணைகளுக்கு சரியான காரணமின்றி எதிராளி சமூகமளிக்கத் தவறினால் முறைப்பாட்டின் செயற்பாட்டை முடிவுக்கு கொண்டு வந்து ஒருதலைப்பட்சமான தீர்மானத்தை எடுக்க விசாரணைக் குழுவிற்கு (CIQ) உரிமை உண்டு.

3.4.21 விசாரணைக் குழுவானது, ஒரு முறைசார் விசாரணையை தொடர்வதற்கு, புகாரில் எந்த ஆதாரமுமில்லை எனக் காணும் பொழுது, முறைப்பாட்டாளரின் வெளிப்படையான சம்மதத்துடன், துணைவேந்தரின் ஆலோசனையுடன் பிரச்சனையை தீர்ப்பதற்கு மத்தியஸ்தத்தை பரிந்துரைக்கும்.

3.4.22 முறைப்படியான விசாரணையின் முடிவில், இயலக் கூடிய விரைவில், பல்கலைக்கழக ஸ்தாபனக் கோவையின் அத்தியாயம் XXII இற்கு இணங்க, ஒழுக்காற்று நடவடிக்கைக்கான பரிந்துரையுடன் தனது கண்டுபிடிப்புக்களை விசாரனைக்குழு துணைவேந்தருக்கு கையளிக்கும்.

3.4.23 பல்கலைக்கழக ஸ்தாபன கோவையின் அல்லது ஒழுக்கம் தொடர்பான பேராதனை பல்கலைக்கழகத்தின் மாணவ உபசட்டங்களின் அடிப்படையில், கடுமையான தவறான நடத்தையை ஏற்படுத்தும் இந்த கொள்கையின் கீழ்வரும் நடத்தை சம்பந்தமாக துணைவேந்தர் முறையான ஒரு ஒழுக்காற்று நடவடிக்கையை தொடங்குவதற்கு இந்தக் கொள்கையில் ஒன்றாவது தடையாக அமையாது.

3.4.24 விசாரணையூடாகப் பெறப்பட்ட ஏதாவது கண்டுபிடிப்புக்கள் அல்லது தீர்மானங்கள் முறைப்பாட்டாளர் தற்போது நடைமுறையிலிருக்கும் எந்தவொரு சட்டத்தின் கீழும் குறைநிவர்த்தியை பெறுவதற்கு தடையாக அமையாது.

3.4.25 விசாரணை குழுவின் கருத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நடத்தையானது முறைப்பாட்டாளர் நீதிமன்றமொன்றில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இயல்பானதாக இருந்தால் விசாரணைக்குழு பரிந்துரைத்து ஆதரவளிக்கலாம்.

3.4.26 முறையான விசாரணையினை நடாத்துவதுடன் தொடர்புபட்ட விடயங்களுக்கு இந்த உப சட்டங்களினால் கொடுக்க முடியாவிட்டால், பல்கலைக்கழக ஸ்தாபன கோவையின் அத்தியாயம் XXII இன் 9ம் 11ம் பந்திகள் அதே போன்று (*mutatis mutandis*) ஏற்புடையதாகும்.

**3.5 முறையீடுகள்**

3.5.1

(அ) முறைப்பாடொன்றின் மேல் பல்கலைக்கழகமானது நடவடிக்கை எடுக்காவிட்டால்; அல்லது

(ஆ) ஆரம்ப விசாரணையின் போது விசாரணை நடாத்தப்பட்ட முறை; அல்லது

(இ) முறையான விசாரணையின் போது விசாரணை நடாத்தப்பட்ட முறை தீர்மானம்; அல்லது

முதலியவற்றால் யாராவது ஒருவர் பாதிக்கப்பட்டால், அவர் செயலின்மை, தீர்மானம் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைக்கு எதிராக 3.5.2 இன் கீழ் நியமிக்கப்பட்ட முறையீட்டு செயற்குழுவுக்கு முறையிடலாம்.

3.5.2 முறைப்பாடு கிடைத்தும் பல்கலைக்கழக கவுன்சிலானது முறைப்பாட்டை கருத்திற் கொள்ள ஒரு குழுவை நியமிக்கும்.

3.5.3 முறையீட்டு செயற்குழுவானது அதன் கண்டுபிடிப்புகளையும், பரிந்துரைகளையும், முறையீடுகளில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையின் தன்மை பற்றியும் பல்கலைக்கழக கவுன்சிலுக்கு அறிவிக்கும். முறையீட்டுக் குழுவின் தீர்மானமானது இறுதியானதாகும்.

**3.6 செயல்முறை பாதுகாப்புக்கள்**

3.6.1 முறைப்பாட்டின் கட்சிக்காரரர்கள் தெரிவு செய்யும் மொழி/மொழிகளிலேயே இந்த உப சட்டங்களின் கீழான சகல செயற்பாடுகளும் நடாத்தப்படும். மொழிபெயர்ப்பாளர்களின் சேவைகள் தேவையான சந்தர்ப்பங்களில் கொடுக்கப்படும்.

3.6.2 இந்த உப சட்டங்களின் கீழ்வரும் எல்லா அதிகாரிகளும், (CMSGBHSV), PIC, CIQ, முறையீட்டுக் குழு, துணைவேந்தர் மற்றும் பல்கலைக்கழக கவுன்சில் உட்பட (ஆனால் மட்டுப்படுத்தப்படவில்லை), தங்கள் தீர்மானங்களுக்கான காரணங்களை கொடுப்பார்கள். காரணங்கள் கொடுக்கப்படாத பொழுது, பாதிப்புற்ற நபர்/நபர்கள் காரணங்களை கோருவதற்கு உரிமை உண்டு.

3.6.3 இந்த கொள்கை, இந்த உப சட்டங்கள் அல்லது பேராதனை பல்கலைக்கழகத்தினுள் செயல்படும் யாதொரு சட்டத்தில் மாறாக ஏதாவது இருந்தாலும், இந்த உப சட்டங்களின் கீழ் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான செயற்பாடுகளின் விடயத்தில் உள்ள இரகசிய தன்மையை ஒவ்வொரு உறுப்பினர் மற்றும்/அல்லது அதிகாரி பாதுகாப்பார்கள், அல்லது பாதுகாப்பதற்கு உதவி செய்வார்கள். இவை

கட்சிக்காரர்களின் அடையாளங்கள், பேட்டியின் பதிவுகள் தொடர்புகள், ஆவணமாக்கல், மற்றும் அறிக்கைகள் உட்பட, ஆனால் வரையறையில்லாமல், உள்ளடக்கும். இவற்றை 2016 இன் தகவல் அறியும் சட்டம் இல.12 இன் விதிகளுக்கமைய அல்லது அங்கீகரிக்கப்பட்ட நபர்களுக்கு மாத்திரமே வெளியிட முடியும்.

3.6.4 இந்த உப சட்டங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட ஒரு செயற்பாடு அல்லது கண்டுபிடிப்பு, பரிந்துரைப்புக்கள் அல்லது இந்த உப சட்டங்களின் கீழ் கொடுக்கப்பட்ட ஆணைகள், நியாயத்திற்கு புறம்பானதாக இல்லாவிட்டால், ஏதாவது முறைசாராத் தன்மை அல்லது இங்கு கொடுக்கப்பட்ட விதிகளை கடைப்பிடிக்காதலால் மாத்திரம் பெறுமதியற்றதாக மாட்டாது.

**3.7 முறைப்பாடுகளை மீளப்பெறல்**

3.7.1 (CMSGBHSV) இன் விருப்புரிமைப்படியே ஒழிய ஒரு முறைப்பாடானது ஒரு முறை தாக்கல் செய்யப்பட்டால், அதனை மீளப்பெறப்பட முடியாது. அப்படியான மீளப்பெறலுக்கு நியாயமான அடிப்படை உள்ளதென திருப்தி அடைந்தால், (CMSGBHSV) ஆனது, துணைவேந்தரின் ஆலோசனையுடன், முறைப்பாட்டை மீளப் பெறுவதற்கு அனுமதிக்கலாம்.

3.7.2 ஒரு தீங்கிழைக்கும், பொய்யான, வெறுப்பூட்டும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென CIQ வானது கண்டறிந்தால், அதனை அது துணைவேந்தருக்கு அறிவிக்கும். துணை வேந்தரானவர் உடனடியாக இப்படியான விஷயத்தை, ஒழுக்காற்று நடவடிக்கைக்காக பல்கலைக்கழக சபைக்கு அறிவிப்பார்.

3.7.3 வேறு ஆதாரமில்லாமல், பதிலளிப்பாளர்/ஆளர்களின் தரப்பிலே தப்பான நடத்தை மேற்கொள்ளப்பட்டது என நிறுவ இயலாத தன்மை ஒரு தவறான புகார் என ஒரு புகாரினை நிரணயிப்பதற்கு அடிப்படையாக இருக்க முடியாது.

**4. உப சட்டங்கள் எதனையும் குறிப்பிடாத பட்சத்தில்**

ஏதாவது விடயங்கள் அல்லது செயற்பாடுகள் தொடர்பிலே இந்த உப சட்டங்கள் எதனையும் குறிப்பிடாத பட்சத்தில், பல்கலைக்கழக கவுன்சிலானது ஒரு குறித்த விடயம் தொடர்பிலே பொருத்தமானதொரு செயற்பாட்டைத் தீர்மானிக்கலாம்.

**5. உப சட்டங்களைத் திருத்துதல்**

பேராதனை பல்கலைக்கழக கவுன்சிலின் அனுமதிக்குட்பட்டு, துணை வேந்தரின் சம்மதத்துடன் மேற்கூறிய உப சட்டங்கள் ஒரு கிரமமான முறையில் (CMSGBHSV) இனால் புதுப்பிக்கப்படும், மற்றும்/அல்லது திருத்தி அமைக்கப்படும். இந்தக் கொள்கையினதும் இந்த உப சட்டங்களினதும் குறிக்கோள்களுடன் ஒத்துப் போகாததாக இல்லாவிட்டால், புதுப்பித்தல், மற்றும்/அல்லது திருத்தங்களுக்கு கவுன்சில் அனுமதியளிக்கும். அப்படி ஒரு வேளை இப் புதுப்பித்ல்களும், மற்றும்/அல்லது திருத்தங்க்ளும் கொள்கையுடனும் இந்த விதிகளுடனும் ஒத்துப்போகாதென கவுன்சில் கருதினால், துணை வேந்தருக்கு

ஊடாக, முன்மொழியப்பட்ட புதுப்பித்தலை மற்றும் அல்லது திருத்தங்களை மீள்பரிசீலனை செய்யும்படி, (CMSGBHSV) இயிடம் கவுன்சில் கோரிக்கை விடுக்கும்.

**6. விளக்கம்**

இந்த உப சட்டங்களிலே-

வேறு சூழலில் தேவைப்பட்டால் ஒழிய,

ஒரு அகவயமான அல்லது புறவயமான நியமத்தின் ஊடாக நோக்கும் போது, நடத்தையானது ஒரு தனிநபரானவர், பல்கலைக்கழகத்தினது கல்வி சார், தொழில் சார், மற்றும்/அல்லது வளாகத்திலே தங்குமிடம் சார் அனுபவங்களில் இருந்து நன்மை பெறுவதில் நியாயமற்ற முறையிலே குறுக்கீடு விளைவிப்பதாகவும், வரையறை செய்வதாகவும் அல்லது தடுக்கும் வகையில் போதுமான அளவுக்குக் கடுமையானதாகவும், தொடர்ச்சியானதாகவும், ஊடுருவிப் போய் இருப்பதாகவும் அமைகையில் அங்கு 'பகைமைத் தன்மையான சூழல்' நிலவுகிறது. பகைமைத் தன்மையாக ஒரு சூழல் தொடர்ச்சியானதும், ஊடுருவிப் போய் இருப்பதாகவும் அமையும் நடத்தையினால் அல்லது ஒரு தனித்த அல்லது தனிப்படுத்தப்பட்ட ஆனால் போதிய அளவு கடுமைத் தன்மையான சம்பவத்தினால் ஏற்படுத்தப்படலாம்.

'கொள்கை' எனப்படுவது பாலியல் அல்லது பால்நிலை சார் தொந்தரவு மற்றும் பாலியல் வன்முறை பற்றிய கொள்கை என்பதாகும்.

'பாலியல் அல்லது பால்நிலை சார் துன்புறுத்தல்' என்பதிலே பாலியல் துன்புறுத்தல் என்பது ஏதாவது வரவேற்கத்தகாத பாலியல் சார்ந்த நடத்தையை (உடல் சார்ந்த, வாய்மொழி, சைகை, காட்சி அல்லது எழுதப்பட்ட), இப்படியான நடத்தைக்கு முகம் கொடுக்கும் ஒருவரின் மேல் இழைக்கப்படும் உடல் சார்ந்த, உளவியல் சார்ந்த அல்லது ஏனைய தீங்குகளை அல்லது எரிச்சலை உள்ளடக்கும். பால்நிலை சார் துன்புறுத்தல் என்பது, பால்நிலை, பால் நிலைத் தன்மை, பால்நிலை அடையாளம் அல்லது பால்நிலை சார் வெளிப்படுத்தல்கள் சார்பான துன்புறுத்தல்களையும், பால் ரீதியான ஒருமைப்படுத்தி அவமதிக்கும் செயல்களையும் உள்ளடக்கும். வாய் மொழி மூலமான, வாய் மொழி மூலமற்ற, காட்சி சார்பான, உடல் ரீதியான, மற்றும் ஏனைய அச்சுறுத்தல், பலவந்தப்படுத்தல், வன்மமாகச் செயற்படல், பயமுறச் செய்தல், பகைமையினை ஏற்படுத்தும் ஆனால் பாலியல் ரீதியான நடத்தையினை உள்ளடக்காத செயல்களை பால்நிலை சார் துன்புறுத்தல் என்பது குறிக்கும். அத்துடன் இவ்வாறான துன்புறுத்தல் ஒரு பகைமைத் தன்மையான சூழலின் உருவாக்கத்துக்கு வழி செய்வதாகவும் அமையும்.

'பாலியல் வன்முறையானது' பாலியல் வன்கொடுமை, பாலியல் தாக்குதல், பாலியல் தொந்தரவு செய்தல், உள்ளக வன்முறை அல்லது இப்படியான செயல்களை செய்ய எத்தனித்தல், அத்துடன் பாலியல் சாரந்த எண்ணத்துடனான உடல் ரீதியான நடத்தை என்பவற்றினை உள்ளடக்கும்.

'பதிலடி' ஆனது அச்சுறுத்தல்கள், மிரட்டல், பழிவாங்கல்கள் மற்றும்/அல்லது இக்கொள்கையின் பிரகாரம் தடை செய்யப்பட்ட நடத்தையினை அறிவிக்கும் நபரொருவருக்கு எதிரான கல்வி மற்றும் தொழில் ரீதியிலான பாதகமான நடவடிக்கைகள் அல்லது முறைப்பாடு, விசாரணை, சீர்திருத்தல் அல்லது ஒழுக்காற்றுச் செயற்பாடுகளில் ஒருவர் பங்குபற்றியமைக்காக அவருக்கு எதிரொக மேற்கொள்ளப்படும் பாதகமான நடவடிக்கைகள்.

**7. ஒழுங்கு நடவடிக்கை**

இந்தக் கொள்கையின் கீழ் தடை செய்யப்பட்டது என வரைவிலக்கணப்படுத்தப்படும் நடவடிக்கையில் ஒருவர் ஈடுபட்டிருக்கிறார் என்பது கண்டறியப்பட்டால், பல்கலைக்கழக ஸ்தாபன கோவையின் அத்தியாயம் XXII இல் உள்ளவாறு பொருத்தமான ஒரு தண்டனையை கவுன்சில் தீர்மானித்து சுமத்தலாம்.

**அட்டவணை I**

கீழ்வரும் நடத்தைகள் (ஆனால் இவற்றிற்கு வரையறுக்கப்படவில்லை) பாலியல் துன்புறுத்தல், பால்நிலை சார் துன்புறுத்தல், பாலியல் வன்முறை மற்றும் பதிலடி போன்ற விடயங்களினுள் அடங்கும்:

(அ) வாய்மொழி, வாய்மொழி அல்லாத அல்லது உடல் நடத்தை, எழுத்து மூலம், தொலைபேசி, மின்னஞ்சல் அல்லது சர்வதேச வலையமைப்பு, சமூக வலைத்தளம் போன்ற வேறுவகையான தொடர்பு சாதனங்கள் ஊடாக, முக்கியமாக அவை மீண்டும் மீண்டும் செய்யப்படுகின்ற போது ஏற்படும் வேண்டத்தகாத பாலியல் மீறல்கள் மற்றும் தேவையற்ற பாலியல் ரீதியான கருத்துக்கள்;

(ஆ) சம்பந்தப்பட்டவர்களுடைய முன் அறிவுக்கெட்டாமலும் சம்மதமில்லாமலும், பதிவுசெய்தல், புகைப்படம் எடுத்தல், பரப்புதல், அஞ்சல் செய்தல் அல்லது அந்தரங்க அல்லது பாலியல் விம்பங்களை விநியோகித்தல்;

(இ) பாலியல் உதவிகளை கோருதல்;

(ஈ) வெளிப்படையாக அல்லது மறைமுகமாக வெகுமதிகளுக்கு வாக்குறுதிகள், அச்சுறுத்தல்கள் அல்லது பதிலடிகள் முதவியவற்றுடன் இணைந்த பாலியல் ஒத்துழைப்புக்கான கோரிக்கைகள் மற்றும் வேண்டுகோள்கள்;

(உ) ஆடையின்றியோ அல்லது ஆடையுடனோ அந்தரங்க உடல் பகுதியை தொடுதல் அல்லது உணர்தல்;

(ஊ) கற்பழிப்பு, பாலியல் தாக்குதல் அல்லது பலவந்தப்படுத்தல் அல்லது இப்படியானவற்றை செய்ய எத்தனித்தல்/அச்சுறுத்தல்;

(எ) முன்னாள் துணை அல்லது நெருங்கிய பங்காளியினால், பல்கலைக்கழக வளாகத்தினுள் வேண்டுமென்றோ அல்லது பொறுப்பற்ற முறையிலோ மனம் அல்லது உடல் காயத்தை ஏற்படுத்துகின்ற அல்லது தீவிர உடல் காயத்தை ஏற்படுத்துமென்ற நியாயமான அச்சத்தில் முறைபாட்டாளரை வைக்கக்கூடிய துன்புறுத்தல் அல்லது வன்முறை;

(ஏ) பால்நிலை, பால் நிலைத் தன்மை, பால்நிலை அடையாளம் அல்லது பால்நிலை சார் வெளிப்படுத்தல்கள் சார்பான துன்புறுத்தல்களும், பால் ரீதியான ஒருமைப்படுத்தி அவமதிக்கும் செயல்களும். இவற்றினுள் வாய் மொழி மூலமான, வாய் மொழி மூலமற்ற, காட்சி சார்பான, உடல் ரீதியான, மற்றும் ஏனைய அச்சுறுத்தல், பலவந்தப்படுத்தல், வன்மமாகச் செயற்படல், பயமுறச் செய்தல், பகைமையினை ஏற்படுத்தும் ஆனால் பாலியல் ரீதியான நடத்தையினை உள்ளடக்காத செயல்கள். அத்துடன் இவ்வாறான துன்புறுத்தல் ஒரு பகைமைத் தன்மையான சூழலின் உருவாக்கத்துக்கு வழி செய்வதாகவும் அமையும்.

(ஐ) மேற்கூறிய ஏதேனுமொன்று பற்றிய தவறான குற்றச்சாட்டு (தவறான குற்றச்சாட்டிற்கும் புகாரை நிரூபிக்க இயலாமைக்கும் உள்ள வேறுபாட்டிற்கு 3.7 ஐ பார்க்கவும்)

(ஒ) தரங்கள், வகுப்புக்கள், பட்டம் வழங்குதல், வேலை ஒதுக்கீடு மற்றும் ஆட்சேர்ப்பு முடிவுகள் சம்பந்தமாக தண்டித்தல் அல்லது தண்டிப்பதாக அச்சுறுத்தல் உள்ளடங்கலான முறைப்பாடு தொடர்பான மிரட்டல் நடவடிக்கைகள்.